**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
**எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.**
**தொலைபேசி: 044 – 22201337**
**மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in**

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**
*******

**ஆணை எண். 120/ந/2022**
**நாள். 17.10.2022**

திரு. M.C.ஞானசேகரன்,
நீலகிரி. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
நெல்லியாளம் நகராட்சி,
நீலகிரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

நீலகிரி மாவட்டம், கூடலூர், TANTEA எண்.2, தேவாலா, எண்.4/254 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M.C.ஞானசேகரன் என்பவரின் 12.07.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.07.2022 அன்று பெறப்பட்டு 120/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நீலகிரி மாவட்டம், கூடலூர், TANTEA எண்.2, தேவாலா, எண்.4/254 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M.C.ஞானசேகரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“கடந்த 30.11.2021 அன்று நெல்லியாளம் நகராட்சி அலுவலகத்தில் பல்வேறு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று பல பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். மேற்படி ஒப்பந்தம் கோரப்பட்ட நிலையில் பதிவுபெற்ற அனைத்து ஒப்பந்ததாரர்களாலும் ஆட்சேபனை கடிதம், 30.11.2021 அன்று நெல்லியாளம் நகராட்சி ஆணையாளரிடம் கொடுக்கப்பட்டது. அதில் திரு.நசுருதீன், திரு.சுஹைபு மற்றும் சில ஒப்பந்ததாரர்கள், அவர்களின் பெயரில் சால்வன்சி சான்றிதழ் ஒப்படைக்காமல் வேறு நபர்களின் பெயரில் சால்வன்சி பெற்று சமர்ப்பித்துள்ளார்கள் எனவும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும் அனைவரும் கையொப்பமிட்டு மனு அளித்தனர்.

நெல்லியாளம் நகராட்சி ஆணையாளர் திரு. அப்துல் ஹாரிஸ், அனைத்து ஒப்பந்ததாரர்களின் புகார் கடிதங்களை பெற்றுக்கொண்டு, அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப் புள்ளிகளை நெல்லியாளம் நகராட்சி பொறியாளர் முன்னிலையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வாய்வின் போது அனைத்து ஒப்பந்ததாரர்களின் புகாரில்

குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் விபரங்கள் உண்மை என தெரிவித்து. பின்னர் திரு.அப்துல் ஹாரிஸ், ஆணையாளர் 30.11.2021, ந.க.எண்.2520/2021/இ1–ல் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அதில் அவரால் குறிப்பிடப்பட்டுள்ளவை பின்வருமாறு:

"செல்வநிலை சான்று தவறாக அளித்தவர்கள் விபரம்

1) திரு.நசுருதீன் – Solvency –ல் உள்ள வேறுநபர் பெயர் (திருமதி. ஆயிஷா)
2) திரு.சுஹைபு – Solvency –ல் உள்ள வேறுநபர் பெயர் (திரு.K.P.அம்சா)
3) திரு.சிவன் – Solvency –ல் உள்ள வேறுநபர் பெயர் (திருமதி.தெய்வானை)
4) திரு.அபுதாஹிர் – Solvency –ல் உள்ள வேறுநபர் பெயர் (திருமதி.பாத்திமாபீவி)

மேற்கண்ட நபர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் நெல்லியாளம் நகராட்சி பொறியாளர் முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்ட போது, மேற்படி விபரங்கள் உண்மை என தெரியவரப் பொற்றுள்ளதால். மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை, இரத்து செய்யவும். மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் மீது உரிய மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் இவ்வறிவிப்பின் மூலம் அறிவித்திருந்தார்".

மேலும் ஆணையாளர் தனது கடித ந.க.எண்.2520/2021/இ1–ல் தவறு செய்தவர்களின் ஒப்பந்த புள்ளியை இரத்து செய்தது மட்டுமில்லாமல் அவர்களின் மீது தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தார். ஆனால் அதற்கு நேர் எதிராக தன் பதவியை தவறுதலாக பயன்படுத்தி தவறு செய்தவர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு, இரத்து செய்த ஒப்பந்தப் பதிவை தவறுதலாக, சட்டத்துக்கு புறம்பாக, புதுப்பித்துக் கொடுத்துள்ளார். இது IPC சட்டப்படியும், ஒழுங்கு நடவடிக்கை சட்டப்படியும் குற்றம். இவரின் நேர்மையற்ற செயலால் நேர்மையான ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தங்களை தொடர்ந்து நிராகரிக்கும் செயலிலும் ஈடுபட்டுள்ளார்.

புகார் எண். 1

நெல்லியாளம் நகராட்சி ஆணையாளர் திரு.அப்துல் ஹாரிஸ், என்பவர் 30.11.2021 நாளிட்ட அறிவிப்பில் தவறிழைத்தவர்கள் தங்களின் பெயரில் Solvency Certificate கொடுக்காமல் வேறு நபர்களின் பெயரில் கொடுத்தார்கள் என்பதற்காக அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை இரத்து செய்த ஆணையாளர் பிறகு தவறிழைத்தவர்கள் புதிய Solvency அவர்களின் பெயரில் பெற்றபோது, அதை வைத்து இரத்து செய்த ஒப்பந்தப் பதிவை எப்படி புதுப்பித்தார்? அதாவது புதிய Solvency Certificate தாசில்தாரிடம் பெற்றால் புதிதாகதான் ஒப்பந்தப் பதிவு செய்ய முடியுமே தவிர இரத்து செய்த ஒப்பந்தப் பதிவையோ அல்லது பழைய ஒப்பந்தப் பதிவையோ புதுப்பிக்க இயலாது. ஆகையினால் இரத்து செய்த ஒப்பந்தப் பதிவை வேண்டுமென்றே, தன் பதவியை தவறுதலாக பயன்படுத்தி, தவறிழைத்தோர்களிடம் பணம் பெற்று சட்டத்திற்கும், தான் வகிக்கும் பொறுப்பிற்கும் எதிராக மற்றும் அவர் அறிவித்த அறிவிப்பிற்கும் எதிராக தவறிழைத்தோர்களின் பழைய ஒப்பந்தப் பதிவை புதிதாக பெற்ற Solvency–யை வைத்து புதுபித்துக் கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது.

புகார் எண். 2

திரு.அப்துல் ஹாரிஸ், ஆணையாளர் தன் அறிவிப்பில் கூறியபடி தவறிழைத்தவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இந்நாள் வரை எடுக்கவில்லை. இதன் மூலம் அவர் தவறிழைத்தோர்களை காப்பாற்றி உள்ளார். அதற்கு மிகப்பெரிய அளவில் லஞ்சம் பெற்றுள்ளார்.

புகார் எண். 3

தவறிழைத்தோர்களின் பழைய ஒப்பந்தப் பதிவை புதிதாக பெற்ற Solvency–யை வைத்து புதுப்பித்ததின் மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்தியுள்ளார். அதாவது புதிதாக ஒப்பந்தப் பதிவை செய்தால் அதற்கு கட்டணமாக ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம்) வசூலிக்கப்படும் அதுவே பழைய ஒப்பந்தத்தை புதுப்பித்தால் கட்டணமாக ரூ.2,000/– (ரூபாய் இரண்டாயிரம்) மட்டுமே வசூலிக்கப்படலாம். ஆகையினால் அவர் பதவியை தவறுதலாக பயன்படுத்தி, உண்மைகளை மறைத்து தன் சுயலாபத்திற்காக இக்குற்றச்செயலை செய்துள்ளார்.

புகார் எண். 4

தவறிழைத்தோர்களான திரு.நசுருதீன் மற்றும் திரு.சுஹைபு அவர்களின் தம்பி நெல்லியாளம் நகராட்சியின் 5–வது வார்டு கவுன்சிலராகவும் செல்வாக்கு பெற்றவராகவும் திகழ்ந்து வருகிறார். அவருடன் சேர்ந்து ஆணையாளர் இக்குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளார் என்பது தெரிய வருகிறது.

மேற்படி நான்கு புகார்களையும் மற்றும் வேறு ஏதேனும் விசாரணையின் போது தெரியவந்தால் அந்த புகாரையும் தயவுகூர்ந்து விசாரித்து உரிய காலத்திற்குள் தக்க சட்ட நடவடிக்கை எடுக்கவோ / பரிந்துரைக்கவோ வேண்டுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.08.2022 நாளிட்ட கடிதம் மூலம் நெல்லியாளம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

மேட்டுப்பாளையம் நகராட்சி துப்புரவு ஆய்வாளர் மற்றும் ஆணையாளர் பொறுப்பில் பணிபுரியும் திரு.சி.பாலகுமார் என்பவர் தனது 29.08.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

மனுதாரரின் புகார் எண்.1க்கான பதில்

1) திரு.நசுருதீன் ஒப்பந்ததாரர் தனது பெயரில் Solvency இல்லாமல் திருமதி. ஆயிஷா க/பெ. அமீது என்பவரின் பொது அதிகாரம் பத்திரம், (General Power of Attorney) நாள்.23.11.2016 (Notary Registrar) மூலம் 2021–2022 ஆம் ஆண்டுக்கு புதுப்பிக்க விண்ணப்பித்திருந்தார்.
2) திரு.M.K.சுஹைபு, ஒப்பந்ததாரர் தனது பெயரில் Solvency இல்லாமல் திரு.K.P.அம்சா த/பெ. குஞ்சு முகமது ஹாஜி என்பவரின் பொது அதிகார பத்திரம், (General Power of Attorney) நாள்.23.11.2016 (Notary Registrar) மூலம் 2021–2022 ஆம் ஆண்டுக்கு ஒப்பந்தப் பதிவு புதுப்பிக்க விண்ணப்பித்திருந்தார்.

3) திரு.அபுதாஹிர், ஒப்பந்ததாரர் தனது பெயரில் Solvency இல்லாமல் திருமதி. பாத்திமா பீவி க/பெ. அப்துல்பாரி என்பவரின் Special Power of Attorney, நாள்.14.11.2016 (Notary Registrar) மூலம் 2021–2022 ஆம் ஆண்டுக்கு ஒப்பந்தப் பதிவு புதுப்பிக்க விண்ணப்பித்திருந்தார்.

மேற்படி ஒப்பந்ததாரர் வரிசை எண்.1) திரு.M.K.நசுருதீன் 2) திரு.M.K.சுஹைபு மற்றும் 3) திரு.அபுதாஹிர் என்பவர்கள் 2016 ஆம் வருடம் General Power of Attorney,மூலம் ஒப்பந்தப் பதிவை புதுப்பிக்க விண்ணப்பித்து இருந்தார்கள். General Power of Attorney, 2016–ம் வருடம் இருந்ததால், தற்போதைய நிலை குறித்த முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்க

தெரிவிக்கப்பட்டது. திரு.அப்துல்ஹாரிஸ், ஆணையாளரால் தனது அறிவிப்பு 30.11.2021 ந.க.எண்.2520/2021/இ1–ல் ஒப்பந்தப்புள்ளி மட்டுமே இரத்து செய்யப்பட்டுள்ளது, ஒப்பந்த பதிவு ரத்து செய்யப்படவில்லை. இந்நிலையில் 1) திரு.எம்.கே.நசுருதீன் ஒப்பந்ததாரர், General Power of Attorney (Notary Registrar) பதிலாக தனது பெயரில் Solvency புதியதாக வழங்கியுள்ளார். 2) திரு.M.K.சுஹைபு 3) திரு.அபுதாஹிர் ஆகியோர் ஏற்கனவே வழங்கிய General Power of Attorney-யை புதுப்பித்து பதிவுத்துறை மூலம் பதிவு செய்து சமர்ப்பித்துள்ளனர். அதன்பேரில் ஒப்பந்த பதிவு புதுக்கப்பட்டுள்ளது. 4) திரு.சிவன் த/பெ.பெரியசாமி, ஒப்பந்ததாரரால் 2022–2023 ஆம் ஆண்டு ஒப்பந்தப் பதிவு புதுப்பிக்க விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் 2021–2022 ஆம் ஆண்டு எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

புகார் எண்.2–க்கு பதில்

நெல்லியாளம் நகராட்சி ந.க.எண்.2520/2021/இ–1ல், 30.11.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மனுதாரரால் கூறப்படும் தவறிழைத்தோர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்பட்டுள்ளது. மேலும் 1) திரு.எம்.கே.நசருதீன் ஒப்பந்ததாரர் General Power of Attorney (Notary Registrar) -க்கு பதிலாக தனது பெயரில் Solvency புதியதாக வழங்கியுள்ளார். 2) திரு.M.K.சுஹைபு 3) திரு.அபுதாஹிர் ஆகியோர் ஏற்கனவே வழங்கிய General Power of Attorney-யை புதுப்பித்து பதிவுத்துறை மூலம் பதிவு செய்து சமர்ப்பித்துள்ளதை அடிப்படையாக கொண்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் தவறிழைத்தோர்களை காப்பாற்ற புகார்தாரர் தெரிவித்துள்ளவாறு லஞ்சம் ஏதும் பெறப்படவில்லை என்ற விபரம் சமர்ப்பிக்கப்படுகிறது.

புகார் எண்.3–க்கு பதில்

நெல்லியாளம் நகராட்சி ந.க.எண்.2520/2021/இ–1ல், 30.11.2021 அன்று மனுதாரரால் கூறப்படும் தவறிழைத்தோர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே நிராகரிக்கப்பட்டது. ஒப்பந்த பதிவு இரத்து செய்யப்படவில்லை. ஏற்கனவே இருந்த ஒப்பந்ததாரர் பெயரில் ஒப்பந்தம் புதுப்பித்தல் கட்டணம் வசூலிக்கப்பட்டு. உரிய ஆவணங்கள் அடிப்படையில் ஒப்பந்தப் பதிவு புதுப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே புதிய ஒப்பந்ததாரர் பதிவு கட்டணம் பெறப்படவில்லை.

புகார் எண்.4–க்கு பதில்

நெல்லியாளம் நகராட்சி ஆணையாளராக இருந்த திரு.அப்துல் ஹாரிஸ், மேற்காணும் புகாரில் தெரிவித்துள்ளவாறு எவ்வித குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை என்ற விபரம் சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் நெல்லியாளம் நகராட்சி ஆணையரும் 22.09.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.09.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. M.C.ஞானசேகரன், 22.09.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"நீலகிரி மாவட்டம் நெல்லியாளம் நகராட்சியில் பல்வேறு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி 30.11.2021 அன்று கோரப்பட்டது. அதில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்கள் பங்கேற்றனர். அதில் கீழ்கண்ட நான்கு பேர்கள் செல்வநிலை சான்றினை (Solvency Certificate) தவறாக அதாவது வேறொருவர் பெயரில் அளித்திருந்தனர்.

(1) திரு. நசுருதீன்
(2) திரு. சுஹைபு
(3) திரு. அபுதாஹிர்
(4) திரு. சிவன்

மேற்கண்ட நான்குபேர்களின் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான மனுக்களை பரிசீலனை செய்த அப்போதைய நெல்லியாளம் நகராட்சி ஆணையர் திரு. அப்துல் உறாரிஸ், மேற்கண்ட நான்கு பேர்களின் ஒப்பந்தப் பதிவுகளை பதிவு செய்து, பின்னர் ஏதோவொரு காரணத்திற்காக ரத்து செய்த ஒப்பந்தப் பதிவுகளை சட்டத்திற்கு புறம்பாக மேற்கண்ட வரிசை எண் 1 முதல் 3 வரை கண்டுள்ள நபர்களுக்கு புதுப்பித்துக் கொடுத்துள்ளார். வரிசை எண் 4ல் உள்ள திரு. சிவன் என்பவருக்கு ஒப்பந்தப் பதிவை புதுப்பிக்கவில்லை.

ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப் பதிவு ஒவ்வொரு ஆண்டும் பத்திரப் பதிவு பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். ஆனால் மேற்கண்ட 4 பேர்களும் ஆண்டுதோறும் முறையாக தங்களது ஒப்பந்தப் பதிவை சட்டப்படி பதிவு செய்யவில்லை. எனவே, மேற்கண்ட 3 நபர்களுக்கு ரத்து செய்யப்பட்ட ஒப்பந்தப் பதிவை புதுப்பித்ததால் (Renewal) நகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. அதாவது ஒப்பந்தப் பதிவை புதுப்பித்தால், அதற்கு ரூபாய் 2,000/– கட்டணம் ஆகும். ஆனால், ஒப்பந்தப் பதிவை புதிதாக பதிவு செய்தால் அதற்குக் கட்டணம் ரூபாய் 20,000/– ஆகும்.

மேற்கண்ட மூன்று பேர்களுக்கும் நபர் ஒருவருக்கு ரூபாய் 18,000/– வீதம் மொத்தம் 54 ஆயிரம் ரூபாய் நகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட நபர்களுக்கு நெல்லியாளம் நகராட்சியில் ஒப்பந்தப் பணிகள் தற்போதும் வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்திற்கு என்னால் அளிக்கப்பட்ட 22.7.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான நெல்லியாளம் நகராட்சியில் ஓவர்ஸியராகப் பணியாற்றும் திருமதி. ரவிகலா என்பவர் 22.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"நீலகிரி மாவட்டம் நெல்லியாளம் நகராட்சியில் பல்வேறு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி 30.11.2021 அன்று கோரப்பட்டது. அதில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்கள் பங்கேற்றனர். அதில் திரு.D.நசுருதீன் (2) திரு. சுஉைறபு (3) திரு. அபுதாஉறிர் மற்றும் (4) திரு. சிவன் ஆகிய நான்கு பேர்கள் செல்வநிலை சான்றிதழ்களை (Solvency Certificate) தவறாக அதாவது வேறொருவர் பெயரில் அளித்திருந்ததால் மேற்கண்ட 4 பேர்களின் ஒப்பந்தப் புள்ளிகள் 30.11.2021 அன்றே நகராட்சி ஆணையரால் இரத்து செய்யப்பட்டன.

பின்னர் அப்போதைய ஆணையர் திரு. அப்துல்உறாரிஸ் என்பவர் தனது செயல்முறை ஆணைகள் நாள் 25.5.2022ல் மேற்கண்ட நான்கு பேர்களில், அதாவது திரு. சிவன் என்பவரின் ஒப்பந்தப் பதிவை தவிர்த்து மற்ற 3 நபர்களுக்கு ஒப்பந்தப் பதிவை புதுப்பித்து (Renewal) உத்தரவிட்டுள்ளார். ஒப்பந்தப் பதிவினை புதுப்பிக்கும்போது மேற்கண்ட திரு. நசுருதீன், திரு. சுஉைறபு மற்றும் திரு. அபுதாஉறிர் ஆகியோர் தங்களது 2016 ஆம் வருடத்திய General

Power of Attorney-யை பத்திரப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை. மாறாக Notary Public –ன் கையொப்பம் பெற்று நகராட்சியில் சமர்ப்பித்துள்ளனர். மேலும், ஒப்பந்ததாரர்கள் தங்களது பெயரை நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்யும்போது, தங்களது பெயரிலான செல்வநிலை சான்றினை ( Solvency Certificate) நகராட்சியில் அளிக்க வேண்டும். அல்லது, பத்திரப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட General Power of Attorney-யை நகராட்சியில் சமர்ப்பித்திடவேண்டும். மேற்கண்ட செயல்முறை ஆணைகளின் நகல்கள் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. ஒப்பந்ததாரர்களின் பதிவை மேற்கண்டவாறு புதுப்பித்ததைத் தொடர்ந்து, மேற்கண்ட 3 ஒப்பந்ததாரர்களும் நெல்லியாளம் நகராட்சியில் ஒப்பந்தப் பணிகள் தற்போதும் செய்து வருகின்றனர் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்நேர்வு தொடர்பாக நெல்லியாளம் நகராட்சி ஆணையாளரின் (பொறுப்பு) 29.8.2022 நாளிட்ட கடிதம் மற்றும் அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) எதிர்மனுதாரரான நெல்லியாளம் முன்னாள் நகராட்சிப் பொறியாளரும் (பொறுப்பு) தற்போது கூடலூர் நகராட்சியில், நகராட்சிப் பொறியாளராகப் பணியாற்றும் திரு.கி.பார்த்தசாரதி என்பவர் 22.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''நீலகிரி மாவட்டம் நெல்லியாளம் நகராட்சியில் பல்வேறு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி 30.11.2021 அன்று கோரப்பட்டது. அதில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்கள் பங்கேற்றனர். அதில் (1) திரு. நசுருதீன் (2) திரு. சுஹைறபு (3) திரு. அபுதாஉறிர் மற்றும் (4) திரு. சிவன் ஆகிய நான்கு பேர்கள் செல்வநிலை சான்றிதழ்களை ( Solvency Certificate) தவறாக அதாவது வேறொருவர் பெயரில் அளித்திருந்ததால் மேற்கண்ட 4 பேரின் ஒப்பந்தப் புள்ளிகள் 30.11.2021 அன்று இரத்து செய்யப்பட்டன. பின்னர் அப்போதைய நெல்லியாளம் நகராட்சி ஆணையர் திரு. அப்துல்உறாரிஸ் என்பவர் தனது 25.5.2022 நாளிட்ட 3 செயல்முறை ஆணைகளில், மேற்கண்ட நான்கு பேர்களில், திரு. சிவன் என்பவரின் ஒப்பந்தப் பதிவை தவிர்த்து மூன்று பேர்களின் அதாவது (1) திரு. நசுருதீன் (2) திரு. சுஹைறபு (3) திரு. அபுதாஉறிர் ஆகியோரின் ஒப்பந்தப் பதிவுகளை புதுப்பித்து (Renewal) உத்தரவிட்டுள்ளார். அப்போதைய நகராட்சிப் பொறியாளரான (பொறுப்பு) என்னை நிர்பந்தப்படுத்தி மேற்கண்ட செயல்முறைகளின் குறிப்புகளில் (Note file) அப்போதைய நகராட்சி ஆணையர் திரு. அப்துல் உறாரிஸ் அவர்கள் கையொப்பம் பெற்றார் என்பதையும், மேலும் இந்நேர்வு தொடர்பாக வேறு எதுவும் எனக்குத் தெரியாது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான நெல்லியாளம் நகராட்சி துப்புரவு ஆய்வாளர் மற்றும் ஆணையாளர் பொறுப்பில் பணிபுரியும் திரு.சி.பாலகுமார் என்பவரின் விளக்க அறிக்கை, நெல்லியாளம் நகராட்சி ஓவர்ஸீயராகப் பணிபுரியும் திருமதி.ரவிகலா என்பவரின் வாக்குமூலம் மற்றும் நெல்லியாளம் முன்னாள் நகராட்சிப் பொறியாளரும் (பொறுப்பு) தற்போது கூடலூர் நகராட்சியில் நகராட்சிப் பொறியாளராகப் பணியாற்றும் திரு.கி.பார்த்தசாரதி என்பவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

நீலகிரி மாவட்டம், கூடலூரைச் சார்ந்த மனுதாரர் திரு.M.C.ஞானசேகரன் என்பவர் தனது முறையீட்டு மனுவில், நெல்லியாளம் நகராட்சியில் பல்வேறு பணிகளுக்காக 30.11.2021 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுள் திருவாளர்கள் நசுருதீன், சுஹைபு மற்றும் அபுதாஹிர் என்பவர்களுக்கு முறைகேடாக ஒப்பந்தப் பதிவு புதுப்பிக்கப்பட்டுள்ளதால், நகராட்சிக்கு வருவாய் இழப்பும் ஏற்பட்டுள்ளது என தெரிவித்து, இதற்கு காரணமான முன்னாள் நகராட்சி ஆணையாளர் திரு.அ.அப்துல் ஹாரிஸ் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தனது முறையீட்டு மனுவில் கோரியுள்ளார்.

நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.35, நாள் 10.03.2000–ல் நகராட்சிகளில் பணி மதிப்பீடு செய்தல், ஒப்பந்தப்புள்ளி கோருதல், மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளுக்கு தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வழிகாட்டும் வகையில் “பொறியாளர் கையேடு வெளியிடப்பட்டது. இக்கையேட்டில் அத்தியாயம் XII-ல் நகராட்சிகளில் ஒப்பந்தாரர்கள் தங்களது பெயரினை பதிவு செய்வதற்கு தங்களது பெயரிலான, வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட செல்வ நிலை சான்றினை (Solvency Certificate) சமர்ப்பித்து, ஒப்பந்தத்தை பதிவு / புதுப்பிக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. செல்வநிலைச் சான்று இல்லாத நிலையில், பத்திரப்பதிவுத் துறையில் பதிவு செய்யப்பட்ட General / Special Power of Attorney யை சமர்ப்பித்தும் நகராட்சியில் ஒப்பந்ததாராகப் பதிவு / புதுப்பிக்கப்படுகிறது. இவ்வாறு பதியப்படும் பதிவுச் சான்றிதழ் நடப்பு நிதியாண்டிற்கு மட்டுமே செல்லுபடியாகும் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் (அடுத்த நிதியாண்டின் 3 மாதங்களுக்குள்) உரிய தொகையினை செலுத்தி புதுப்பிக்கப்பட வேண்டும்.

இந்நிலையில் மனுதாரரின் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள் நசுரூதீன், சுஹைபு, அபுதாஹிர் மற்றும் சிவன் என்பவர்கள் நெல்லியாளம் நகராட்சியால் 30.11.2021 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு தற்போதைய செல்வ நிலையினை கருத்திற்கொள்ளாமல் 2016–ஆம் வருடத்திய Power of Attorney ஐ பத்திரப்பதிவு துறையில் பதிவு செய்யாத Notary Registrar மூலம் பெறப்பட்டதை அடிப்படையாகக் கொண்டே, 2020–21 ஆம் ஆண்டில் தங்களது பெயரில் செல்வநிலை சான்று இல்லாத பிறநபர்களின் பெயரில் செல்வநிலை சான்றினை சமர்ப்பித்ததன் மூலம், பொறியாளர் கையேட்டில் உள்ள வரைமுறைகளின்படி, ஒப்பந்ததாரராகவோ அல்லது புதுப்பிக்கவோ வழிவகை இல்லை. மேற்காணும் ஒப்பந்தாரர்கள் பத்திரப்பதிவு துறையில் பதிவுச்செய்த General Power of Attorneyயோ அல்லது தனது பெயரில் செல்வநிலை சான்று சமர்ப்பிக்கப்படாத நிலையில் அவர்களது ஒப்பந்தப்பதிவினை முன்னாள் நகராட்சி ஆணையர் இரத்து செய்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் சமர்ப்பித்த ஒப்பந்தப்புள்ளி மட்டும் இரத்து செய்துள்ளார். இந்நிலையில் 2022–23 ஆம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரர்கள் திரு.நசுரூதீன் என்பவர் சமர்ப்பித்த அவரது பெயரிலுள்ள வட்டாட்சியரால் அளிக்கப்பட்ட செல்வநிலைச் சான்று மற்றும் திருவாளர்கள் சுஹைபு மற்றும் அபுதாஹிர் ஆகியோர் சமர்ப்பித்த பதிவுத்துறையால் பதியப்பட்ட General Power of Attorneyயை அடிப்படையாகக் கொண்டு, புதிதாக ஒப்பந்தப்பதிவு செய்வதற்கு பதிலாக விதிமீறி அம்மூவரின் ஒப்பந்தப் பதிவுகளை முறைகேடாக புதுப்பித்துள்ளதை ஆவணங்களின் மூலம் தெளிவாக அறிய முடிகிறது. திரு.சிவன் என்பவர் ஒப்பந்தத்தை புதுப்பிக்க விண்ணப்பம் அளிக்கவில்லை. இம்முறைகேடான செயலுக்கு ஒப்புதல் அளிக்கக் கோரி முன்னாள் நெல்லியாளம் நகராட்சிப் பொறியாளர் திரு.கி.பார்த்தசாரதி என்பவரையும் முன்னாள் நகராட்சி ஆணையாளர் நிர்ப்பந்தப்படுத்தியுள்ளதை அவரது வாக்குமூலம் வாயிலாக அறியமுடிகிறது. இச்செயலானது முன்னாள் நகராட்சி ஆணையரின் பொறுப்பற்ற தன்மையினையும், அதிகார துஷ்பிரயோகத்தையும், நகராட்சிக்கு அவப்பெயர்

ஏற்படக்கூடிய நிலையையும் காட்டுகிறது. இவரது இத்தகைய செயலினை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது.

இவ்வாறு முறைகேடாக மேற்காணும் 3 ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப் பதிவினை புதுப்பித்ததன் வாயிலாக புதிதாகப் பதிவதற்கான கட்டணம் தலா ரூ 20,000/– வசூலிப்பதற்கு பதிலாக புதுப்பிப்பு கட்டணமான ரூ 2,000/– மட்டும் வசூல் செய்யப்பட்டதன் மூலம் நகராட்சிக்கு மொத்தம் ரூ 54,000/– நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது, நகராட்சியின் விதிமுறைகளை பின்பற்றாமல், தனது கடமையிலிருந்து தவறிய மற்றும் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட காரணமான முன்னாள் நெல்லியாளம் நகராட்சி ஆணையாளர் மீது உரிய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேற்கண்ட இழப்பீட்டுத் தொகையினை முன்னாள் நெல்லியாளம் நகராட்சி ஆணையாளரிடமிருந்து வசூலித்து நகராட்சி கணக்கில் செலுத்திட நடவடிக்கை எடுத்திடுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

The blatant violations committed by the Municipality Commissioner in this instant case deserve outright condemnation and denunciation. The audacity and illegality displayed by the Commissioner are censured. Severe disciplinary action against the concerned should be expeditiously launched by the Director of Municipal Administration to ensure that such sordid shocking episodes are not repeated elsewhere in the State.

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. M.C.ஞானசேகரன்,
எண். 4/254, தேவாலா TANTEA எண்.2,
கூடலூர் தாலூக்கா, நீலகிரி மாவட்டம்,
2) ஆணையாளர், நெல்லியாளம் நகராட்சி,
நீலகிரி மாவட்டம்.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.
4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலருக்காக